

சிவகங்கையில் 'தமிழ்நாடு நாள்' பேரணியை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், சிவகங்கை நகர்மன்ற தலைவர் துரைஆனந்த், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர் நாகராசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



தென்காசி மாவட்டம் தென்காசி இ.சி.ஈ.அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்,மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., தனுஷ் எம் குமார் எம்.பி.,பழனி நாடார் எம்.எல்.ஏ,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி,தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர்,மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்தையா உள்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்ட புதிய தொழில்நுட்ப மையத்தை நேரில் சென்று தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார். இதில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ் .எஸ்.உமரிசங்கர், வீரபாண்டிய பட்டினம் ஊராட்சி மன்ற தலைவர் மூ.எல்லமுத்து, துணைத் தலைவர் ஜெகதீஸ் வி.ராயன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.3.90 கோடி மதிப்பில் சங்கரன்கோவிலில்

# 13,053 மாணவ - மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்!

தென்காசி. ஜூலை 19-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவர்,

மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்தையா வரவேற்புரை ஆற்றினார்.

இந்த விலையில்லா மிதிவண்டிகள் பிற்படுத்தப்பட்ட நலத்துறை சார்பில் 9729 மாணவர்,மாணவிகளுக்கும் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 3008 மாணவர்,மாணவியர்களுக்கும்,பள்ளி கல்வித்துறை சார்பில் 316 மாணவர், மாணவிகளுக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று தென்காசி மாவட்டத்தில் 53 அரசு பள்ளிகள் 40 அரசு உதவி பெறும் பள்ளிகளில் கடந்த 2022-2023 ஆம் கல்வியாண்டில் 11ம் வகுப்பு பயின்ற 5234 மாணவர்களுக்கும் 7819 மாணவியர்களுக்கு ஆக மொத்தம் 13,053 மாணவர்,மாணவிகளுக்கு ரூபாய் 3,90,32,448 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி பேசியதாவது:-

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது.உங்களுக்கு படிப்பு மட்டும்தான் முக்கியம். மாணவர்களின் படிப்பு சுமையை குறைக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விலையில்லா மிதிவண்டி, சீருடை,காலை சிற்றுண்டி, வேலை வாய்ப்பு உருவாக்கி தரும் நான் முதல்வன் திட்டம் என மாணவச் சமுதாயம் எதிர்காலத்தில் சிறந்து வாழ்வை பெரும் வகையில் சிறப்பான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். "திராவிட மாடல்" ஆட்சி என்றால் என்ன என்பதை மாணவ சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டும். சுயமரியாதை கற்றுக்கொடுத்து எல்லாம் எல்லோருக்கும்! பெண்களுக்கு சம உரிமை எனக்கு கூறுவது தான் "திராவிட மாடல்" ஆட்சியாகும்.அரசு சார்பில் வழங்கும் திட்டங்களை மாணவர்கள் பயன்படுத்தி வாழ்வில் சிறந்த இடத்தை பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

இந்நிகழ்வில் சதன்திருமலைகுமார் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி சரவணன்,ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி,மாவட்ட அவை தலைவர் பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர்கள் புனிதா,

மனோகரன்,ராஜதுரை, மாவட்ட பொருளாளர் இல.சரவணன், ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை,சேர்மதுரை, கிறிஸ்டோபர்,வெற்றி விஜயன், பெரியதுரை,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்)

அந்தோணிசாமி (புளியங்குடி)

அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயப்பிரியா, உடற்கல்வி இயக்குனர் நாராயணன், ஆசிரியர் சங்கர்ராம்,உள்பட அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள்,

மாணவர்,மாணவிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

அதனை தொடர்ந்து தென்காசி இ.சி.ஈ.அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து மாணவர், மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று மாணவர்,மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தனுஷ் எம் குமார் எம்.பி.,பழனிநாடார் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி,தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், துணை தலைவர் சுப்பையா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்தையா, மாவட்ட கல்வி அலுவலர் ராஜேஸ்வரி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நாடு வளர்ச்சி அடைவதில் கல்வியின் பங்கு முக்கியம்

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூலை 19-

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் ஆசிரியர் பயிற்சி மைய வளாகத்தில் பள்ளி கல்வித்துறை சார்பில் ரூபாய் 1கோடியே 43லட்சம் மதிப்பிலான பல்நோக்கு மையம் கட்டப்பட உள்ளது. அதற்கான கட்டிடப் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனர் முனைவர் ஆனந்தி வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் ஒரு கோடியே43 லட்சம் செலவில் அமைய உள்ள பல்நோக்குமைய கட்டிடப் பணியினை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது. இங்கு அமையப்பெறும் இந்த பல்நோக்கு மையம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பல்வேறு வகையிலான பயிற்சியினை உருவாக்கும் மையமாக அமைய உள்ளது. ஏற்கனவே இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனம் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களை உருவாக்கியது பாராட்டுக்குரியதாகும். 1993ம்ஆண்டு இந்த பயிற்சி மையம் துவக்கப்பட்டது. தற்போது அதன் செயல்பாடு கேள்விக்குறியாக உள்ளது.

2017ல் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்த பயிற்சி மையம் மாணவர்களின் வருகை குறைவினால் புதுக்கோட்டைக்கு மாற்றப்பட்டது. இதனால் 25 ஆண்டுகளாக இங்கு படிக்க வரும் பின்தங்கிய மாவட்ட மாணவர்களின் பயிற்சி உரிமை பறிக்கப்பட்டது. அத்தகைய உரிமையினை மீண்டும் இங்கு கொண்டு வருவதற்காக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருடன் கலந்து பேசி விரைவில் முழு அளவில் இங்கு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்ற உறுதியினை அளிக்கிறேன்.

இந்த பயிற்சி மையம் செயல்படு வதற்கு இப்பகுதியில் உள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், குறிப்பாக மாணவர்கள், அதிக அளவில் இங்கு வந்து சேர வேண்டும். அதற்கு பெற்றோர்கள் உதவ வேண்டும். பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால் தான் அரசின் எந்த திட்டங்களும் வெற்றி அடைய முடியும். முதல்வர் கூறுவது போல் கல்வியும் சுகாதாரமும் நாட்டின் இரு கண்களாகும். அதில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ வேண்டும். ஒரு நாடு முன்னேற்றம் அடைய முழு வளர்ச்சி பெற கல்வி முக்கியமானதாகும். அதை கருத்தில் கொண்டு அனைவரும் இங்கு பயிற்சி மையம் சிறப்பாக செயல்பட ஒத்துழைக்க வேண்டும். அரசு இதை நிறைவேற்ற தயாராக இருந்தாலும் பொதுமக்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும்.



இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர்கள் நாகனி செந்தில்குமார், ஸ்டெல்லா, சாந்தா சகாயராணி, ஒன்றிய குழு தலைவர் ராஜேஸ்வரி, ஊராட்சி மன்ற தலைவர் ஜாஸ்மின் மேரி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் செந்தில்குமார், ஒப்பந்தக்காரர் என்.ஆர்.சி. இளங்கோ, காளையார் கோயில் தெற்கு ஒன்றியசெயலாளர் யோக கிருஸ்ணகுமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இலக்கிய அணி குரு போஸ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், துணைச் செயலாளர் முத்துகுமார், உட்பட ஆசிரியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### கலைஞர் நூற்றாண்டு நூலகம்

# 'தென்பாண்டிச் சிங்கங்களை' உருவாக்கும்!



இதயத்தில் குடியிருக்கும்
இருவருக்கு நூற்றாண்டு.

இருவரது பெயரிலும் அறிவுப் புதையலாம் இருபெரும் நூலகங்கள்.

தமிழ்க்குலத்தின் தலைமகனுக்கு தலைநகர் சென்னையில்.

தமிழினத் தலைவனுக்கு
சங்கத்தமிழ்ப் புகழ் மதுரையில்.

இந்தியாவே திரும்பிப் பார்த்துத் திகைத்துப் போகிறது.

இருவரின் இதயத்துடிப்பும் நேசிப்பும் அயராத எழுத்தும் ஆழமான வாசிப்பும்.

ஆச்சரிய ஒற்றுமை...அண்ணா பேரறிஞர். கலைஞர் முத்தமிழறிஞர்.

"கத்தியைத் தீட்டாதே தம்பி, புத்தியைத் தீட்டு" என்று ஆணையிட்ட அறிஞர் அண்ணா தமிழர்களின் அறிவைச் சாணை பிடித்தார். அந்த அண்ணனின் நூற்றாண்டு நினைவாக சென்னையில் உலகத்தரத்தில் ஒரு நூலகம் அமைத்தார் முதல்வர் கலைஞர்.


"தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும் மட்டும் போதாது வீரர்களே, இதோ நான் தரும் அறிவாயுதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று எழுத்தால், பேச்சால் கூர் தீட்டி, தமிழ்ப் பெருமக்களுக்கு அறிவுச்சுடர் ஏற்றினார் கலைஞர். அண்ணாவின் தம்பியான அந்த கலைஞரின் நூற்றாண்டு நினைவாக மாநகர் மதுரையில் சர்வதேசத் தரத்தில் நூலகம் எழுப்பியிருக்கிறார் அவரது புதல்வரான முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தந்தைக்கும் மைந்தருக்கும் காலம் தந்திருக்கும்; காலத்தை வென்று நிற்கும் இந்தக் கல்வெட்டுப் புகழ் வேறு யாருக்கு வாய்க்கும்!

இந்த இரண்டு பிரமாண்ட நூலகங்கள் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த அறிவுக் கருவூலங்கள். வறண்டு போகாதபடி வாழ்விற்கு வளம் சேர்க்கும் நல்நதிகள். இருண்டு கிடக்கும் மனங்களில் அறிவொளி ஏற்றும் சூரியச் சந்திரர்கள். இன்றைய - நாளைய தலைமுறைக்கு தலைசிறந்த இரு தமிழ்த் தாத்தாக்கள் எழுதி வைத்த அழியாத அறிவுச் சொத்துக்கள்.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இந்த நூலகங்களுக்குச் சென்றால், ஒன்று அல்ல...இரண்டு நிச்சயம்!


அண்ணா நூலகம் 'தென்னாட்டு பெர்னாட்ஷா'க்களாக உருமாற்றும்! கலைஞர் நூலகம் 'தென்பாண்டிச் சிங்கங்களை' உருவாக்கும்!



**எம்.பி.உதயசூரியன்**
பத்திரிகையாளர்



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி தென்கரை பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர் திட்டப்பணியை சரவணகுமார் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ், துணை தலைவர் ராதா ராஜேஷ், தென்கரை பேரூர் செயலாளர் பாலமுருகன் மற்றும் கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்



மதுரை மாநகர் கழக முன்னோடி மல்லிகை பாலசந்திரன் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவப்படத்தினை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் வ. வேலுசாமி, மா ஜெயராம், தனச்செல்வம் ,அக்ரி கணேசன், புதூர் பூமிநாதன் எம் எல் ஏ,ஒச்சு பாலு,விஜயலட்சுமி பாண்டியன், முகேஷ் சர்மா,சரவண புவனேஸ்வரி, இளைஞர் அணி சௌந்தர், திலீபன் சக்ரவர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.